அலகு
4

9
அத்தியாயம்

# மனித வள மேலாண்மை
# HUMAN RESOURCE MANAGEMENT

## மனித வள மேம்பாட்டின் அடிப்படைகள்
## FUNDAMENTALS OF HUMAN RESOURCE MANAGEMENT

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு.

–குறள் 578

**பொருள் :** தம் தம் கடமையாகிய தொழில் கெடாமல் கண்ணோட்டம் உடையவராக இருக்க வல்லவர்க்கு இவ்வுலகம் உரிமை உடையது.

### கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள் புரிந்து கொள்ள உதவுவதற்கு

- மனித வளத்தின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்
- மனித வளத்தின் சிறப்பியல்புகள்
- மனித வளத்தின் முக்கியத்துவம்
- மனித வள மேலாண்மையின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்
- மனித வள மேலாண்மையின் அம்சங்கள்
- மனித வள மேலாண்மையின் முக்கியத்துவம்
- மனிதவளமேலாண்மையின்பணிகள்

ஆகியவற்றை புரிந்துக் கொள்ள இயலும்.

### அத்தியாயம் சுருக்கம்


9.01 மனிதவளத்தின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்

9.02 மனிதவளத்தின் சிறப்பியல்புகள்

9.03 மனிதவளத்தின் முக்கியத்துவம்

9.04 மனிதவள மேலாண்மையின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்

9.05 மனித வள மேலாண்மையின் சிறப்பியல்புகள்

9.06 மனிதவள மேலாண்மையின் முக்கியத்துவம்

9.07 மனிதவளமேலாண்மையின் பணிகள்


எந்தவொரு அமைப்பிற்கும் மனித வளமானது மிகவும் முக்கியமானது. நிறுவனங்களின் வெற்றி, வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் ஆகியவை, அவர்கள் கொண்டுள்ள பணியின் தரத்தை சார்ந்துள்ளது. மனித வளத்தின் மூலம் மட்டுமே ஒரு நிறுவனத்தில் உள்ள மற்ற அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து செயல்திறன் மிக்க மற்றும் ஆற்றல் வாய்ந்த ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி வழிநடத்திச் செல்ல முடியும். சமீப காலமாக மனித வளத்தின் முக்கியத்துவம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது ஏனென்றால் வளர்ந்து வரும் உலக வர்த்தகத்தின் தேவை தனித்திறன் கொண்ட தொழிலாளர்களை சார்ந்து இருக்கிறது.

